**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காப்பியம் என்ற சொல்லுக்கு நிகரான ஆங்கிலச்சொல் எது?
2. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
3. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
4. 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எந்நூல் வரிகள்?
5. 'குண்டலகேசி' என்பதன் பொருள் யாது?
6. வளையாபதி எச்சமயக் காப்பியம்?
7. நீலகேசி எந்நூலின் மறுப்பு நூல்?
8. நாககுமாரகாவியம் எத்தனை சருக்கங்களைக் கொண்டது?
9. சேக்கிழாரின் இயற்பெயர் யாது?
10. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
11. பெருங்கதையின் ஆசிரியர் யார்?
12. இயேசு காவியத்தின் ஆசிரியர் யார்?
13. பாரத சக்தி மகாகாவியத்தை இயற்றியவர் யார்?
14. 'பூங்கொடி' யாருடைய நூல்?
15. உரோமப் பேரரசை நிறுவியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பின்னோக்கு உத்தி என்றால் என்ன? அதை முதலில் கூறிய காப்பியம் எது?
2. பெரியபுராணம் – நூல் குறிப்புத் தருக.
3. சிறுகாப்பியத்தின் இலக்கணம் யாது?
4. வீரமாமுனிவர் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
5. இராவண காப்பியம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவை யாவை?
6. ஏனியட் காப்பியத்தின் அடிப்படைக் கருத்துகள் யாவை?
7. அகலிகை வெண்பா பெயர்க் காரணம் கூறுக.
8. கவிஞர் தமிழ் ஒளி பற்றி சிறு குறிப்புத் தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பெரிய புராணத்தின் காப்பியச் சிறப்பினை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து கட்டுரைக்க.

2. (அ) இக்கால இசுலாமியக் காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பிற்காலத் தமிழ்க் கிறித்துவக் காப்பியங்கள் குறித்து தொகுத்தெழுதுக.

3. (அ) அகலிகை வெண்பாவின் நோக்கும் போக்கும் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) 'பூங்கொடி' காப்பியச் சிறப்பினை விவரி.

***